**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை - 600 025.**

**இளநிலைத் தமிழியல் - பட்டம் (B.A. TAMILOLOGY - Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF - LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர் - திசம்பர் 2017**

**A021 இலக்கணம் – 2(சொல்)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு - 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தனி மொழி என்றால் என்ன?
2. ஈர் எழுத்து ஒரு சொல்லுக்கு இரு எடுத்துக்காட்டுகள் தருக.
3. உரிச்சொற்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
4. “அருள்க, கருணைசெய்க” இலக்கணக் குறிப்பு தருக.
5. எழுவாய் வேற்றுமை எது?
6. வாக்கிய வகைகள் இரண்டினைக் கூறுக.
7. வழு என்றால் என்ன?
8. இடம் எத்தனை வகைப்படும்?
9. உவமை என்றால் என்ன?
10. முன்னிலை என்றால் என்ன?
11. தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் எவை?
12. இடுகுறி பெயர்க்கு ஓர் எடுத்துகாட்டு தருக.

13. "நீயே செய்" எவ்வகை விடை?
14. அறிவினாவிற்கு சான்று தருக.
15. இடைச்சொல் வரும் இடங்களைச் சுட்டுக.

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. இலக்கிய வகையால் சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. தெரிநிலை வினைமுற்று என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.
3. உரிச்சொல்லின் பொது இலக்கணம் யாது?
4. வினாவின் வகைகளை விளக்குக.
5. மூவிடங்கள் குறித்து எழுதுக.
6. ஆற்றுநீர்ப் பொருள்கோள் என்றால் என்ன? சான்று தருக.
7. அல்வழிப் புணர்ச்சி என்றால் என்ன?
8. வாக்கிய வகைகளைச் சான்றுடன் விவரிக்க.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) சொல்லின் இலக்கணம் மற்றும் அதன் வகைகளை விளக்கி ஒரு கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) வினை என்றால் என்ன? அதன் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

2. (அ) வழுவின் இலக்கணம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) புணர்ச்சி வகைகள் குறித்து விவரிக்க.

3. (அ) பொருள்கோள் என்றால் என்ன? அதன் வகைளைச் சான்றுடன் விவரிக்க.

(அல்லது)

(ஆ) விடைகளின் வகைகளை விளக்கி வரைக.

***